Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 322 | உள்ளூர் - 22.11.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 322 | வெளியூர் - 23.11.2026 | திங்கட்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

பணம் தங்கவில்லையா? வாஸ்து வழிகள்!

சுகாதாரச் சங்கங்களில் 133 பணியிடங்கள்!

ஆன்மிக நிகழ்ச்சிகளில் தனிநபர் துதிக்குத் தடை!

இபிஎஸ்-க்கு வேலுமணி அட்வைஸ்!

இஸ்ரேலில் புதிய திருப்பம்!

இஸ்ரேல்,நவ. 22–

இஸ்ரேலில் புதிய அரசு அமைக்கும் பொறுப்பில் உள்ள காடி ஐசென்கோட், கூட்டணி அரசு அமைப்பது குறித்து பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் லிகுட் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்து வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான லிகுட் கட்சியின் கூட்டணி 53 இடங்களில் மட்டுமே வென்றன.

அவரை எதிர்த்து போட்டியிட்ட முன்னாள் ராணுவத் தளபதி காடி ஐசென்கோட் கூட்டணி 48 இடங்களையும், முதல்முறையாக அரபு கட்சிகள் 19 இடங்களையும் கைப்பற்றியுள்ளன.

120 இடங்களைக் கொண்ட இஸ்ரேலிய நாடாளுமன்றத்தில், பெரும்பான்மைக்குத் தேவையான 61 இடங்களை எந்தவொரு கட்சியும் கைப்பற்றவில்லை. பின்னர், அரபு



கட்சிகளின் கூட்டணி ஐசென்கோட்டுக்கு ஆதரவளித்துன. இதனால், 6 வாரங்களுக்குள் கூட்டணி அரசை அமைக்கும் பொறுப்பு ஐசென்கோட்டிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஐசென்கோட்டின் யஷார் கட்சித் தலைமையிலான கூட்டணியில் இணைந்து புதிய அரசை அமைப்பதற்கு நெதன்யாகுவின் லிகுட் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இருதரப்புக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் இன்று (நவ. 22) தொடங்கவுள்ளன. ஐசென்கோட் தலைமையிலான கூட்டணி அரசு அரபு கட்சிகளுடன் இணைந்து அமைக்கப்படும் என எதிர்பார்க்கப் பட்ட நிலையில், அந்த முடிவுக்குக் கூட்டணியில் இடம்பெற்ற பிற கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இதுபற்றி, ஐசென்கோட் கூட்டணியில் இடம்பெற்றுள்ள இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் நஃப்தாலி பென்னட், ஐசென்கோட் தலைமையின் கீழ் சியோனிஸ்ட்கள் ஒன்றிணைய வேண்டும் என்றும், அவரது கட்சி நெதன்யாகுவுடன் கூட்டணி சேர விரும்பவில்லை என்றும் கூறியுள்ளார். ஏற்கெனவே, நெதன்யா குவின் அரசு குறித்து இஸ்ரேலியர்கள் இடையே மாறுபட்ட கருத்துகள் நிலவி வருவதால், ஐசென்கோட் அரபு கட்சிகளின் ஆதரவை ஏற்கக் கூடும் என எதிர்பார்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நேபாள பிரதமர் பாலேந்திர ஷா இந்தியா வருகை! முர்மு, மோடியுடன் சந்திப்பு!

புதுடெல்லி, நவ. 22–

நேபாள நாட்டின் பிரதமர் பாலேந்திர ஷா அரசு முறைப் பயணமாக இன்று (நவ. 22) இந்தியாவுக்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் நடைபெற்ற ஜென்–ஸிபோராட்டங்களைத் தொடர்ந்து, இளைஞர்களின் ஆதரவைப் பெற்ற பாடகர் பாலேந்திர ஷா, பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று கடந்த மார்ச் மாதம் பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார். இந்த நிலையில், பிரதமராகப் பதவியேற்ற பின்பு தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக பாலேந்திர ஷா ஞாயிற்றுக்கிழமை (நவ. 22) இந்தியாவுக்கு வருகை தருகிறார்.

நேபாள பிரதமரின் 2 நாள் இந்தப் பயணத்தில், அந்நாட்டின் நிதியமைச்சர் ஸ்வர்ணி வாக்லே, வெளியுறவு அமைச்சர் ஷிசிர் கானல் ஆகியோர் உள்ள சுமார் 34 பேர் கொண்ட குழுவினரும் இந்தியா வருகின்றனர். இந்தப் பயணத்தில்,



குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரைச் சந்திக்கும் நேபாள பிரதமர் ஷா, இருநாடுகள் இடையே யான முக்கிய பேச்சுவார்த்தை களை மேற்கொள்வார். இந்தச் சந்திப்புகளில், கல்வி, சுகாதாரம், விவசாயம், விண்வெளி, பேரிடர் மேலாண்மை மற்றும் மனித வளம் ஆகிய துறைகளில் இந்தியா மற்றும் நேபாளம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, நேபாளத்தில் புதியதாகப் பதவியேற்கும் பிரதமர்கள் தங்களது முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்கு வருவதையே பாரம்பரியமாகப் பின்பற்றி வருகின்றனர். ஆனால், முன்னாள் பிரதமர் சர்மா ஒலி கடந்த 2024 ஆம் ஆண்டு தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக சீனாவுக்குச் சென்றது குறிப்பிடத்தக்கது.



தமிழ்நாட்டில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சென்னை விமான நிலையத்திலிருந்து புதுதில்லி திரும்பும் மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களை மாண்புமிகு செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் ரா. குமார் அவர்கள் பூங்கொத்து கொடுத்து வழியனுப்பி வைத்தார்.

தங்கம் விலை சரிவு!

நகை கடன் பெற்றோருக்கு மார்ஜின் கால்? கூடுதல் தொகை செலுத்தாவிட்டால்...

நகை ஏல அபாயம்!!

புதுடெல்லி, நவ. 22–

தமிழகத்தில் கடந்த இரண்டு வாரங்களாகத் தங்கத்தின் விலை கணிசமாகக் குறைந்துள்ளது. ஒரு சவரன் ஆபரணத் தங்கத்தின் விலை அதன் வரலாற்று உச்சத்திலிருந்து ரூ.40,000 வரை சரிந்துள்ள தாகக் கூறப்படுகிறது. விலை குறைவது நகை வாங்குவோ ருக்கு மகிழ்ச்சி அளித்தாலும், நகையை அடகு வைத்து அவசரத் தேவைக்குக் கடன் பெற்றவர்களுக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

வங்கிகளும் நிதி நிறுவ னங்களும் அடகு வைக்கப்படும் தங்கத்தின் சந்தை மதிப்பின் அடிப்ப டையில், குறிப்பிட்ட கடன் மதிப்பு விகிதத்தில் (LTV) கடன் வழங்குகின்றன. தங்க த்தின் விலை குறைந்தால், அடகு நகையின் மதிப்பு குறையும். ஆனால் ஏற்கெனவே பெற்ற கடனின் அசல் மற்றும் அதற்கான



வட்டி குறையாது. இதனால், கடன் தொகைக்கும் நகையின் தற்போதைய மதிப்புக்கும் இடையிலான விகிதம் உயரலாம். உதாரணமாக, சவரன் ரூ.1.25 லட்சமாக இருந்தபோது அடகு வைத்த நகைக்கு சுமார் ரூ.90,000 வரை கடன் கிடைத்திருக்கலாம். அந்தக் கணக்கில் தங்கத்தின் மதிப்பில் சுமார் 6575 சதவீதம் கடனாக வழங்கப்படுகிறது. தற்போது சவரன் ரூ.92,000 எனக் கணக்கிட்டால், அதே நகையின் அடிப்படையில் கிடைக்கக்கூடிய கடன் மதிப்பு சுமார் ரூ.60,000 ஆக இருக்கும். பழைய கடனுக்கும் தற்போதைய மதிப்புக்கும் இடையிலான சுமார் ரூ.30,000 வித்தியாசம் கடன் மதிப்பு விகிதத்தைப் பாதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்ட LTV வரம்பை மீறும் சூழலில், கடன் வழங்குநர் வாடிக்கையாளரிடம் கடனின் ஒரு பகுதியைச் செலுத்தவோ, கூடுதல் தங்க நகையை அடகு வைக்கவோ கோரலாம். இதற்கான அறிவிப்பு "மார்ஜின் கால்" எனப்படு கிறது. இது அபராதம் அல்ல; கடனுக்கான அடமானப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கையாகும்.

தங்கத்தின் விலை குறைந்த மறுநாளே நகை ஏலம் விடப்படாது. முதலில் வாடிக்கையாளருக்கு அறி விப்பு அளித்து, பதிலளிக்க வும் நிலுவையைச் சரிசெய்ய வும் கால அவகாசம் வழ ங்கப்படும். அந்தக் கால த்திற்குள் வாடிக்கையாளர் நடவடிக்கை எடுக்கா விட்டால், உரிய பொது அறிவிப்புக்குப் பிறகு நகையை ஏலம் விடும் நடைமுறை தொடங்கலாம். ஏலத்தில் கடன் மற்றும் வட்டியைச் சரிசெய்த பிறகு மீதமுள்ள தொகை இருந்தால், அது வாடிக்கையாளருக்குத் திருப்பித் தரப்பட வேண்டும்

ஆண்டுக்கு 3 இலவச கேஸ் சிலிண்டர்கள்?

சென்னை, நவ. 22–

தமிழகத்தில் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு மூன்று சமையல் எரிவாயு சிலிண்டர்களை இலவசமாக வழங்கும் திட்டத்துக்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் வாக்குறுதியான ஆண்டுக்கு ஆறு சிலிண்டர்கள் வழங்கும் திட்டத்தின் முதற்கட்டமாக, மூன்று சிலிண்டர்கள் வழங்கப்படும் என முதலமைச்சர் விஜய் சட்டப்பேரவையில் அறிவித்ததாகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மூலம் சுமார் 1.30 கோடி குடும்பங்கள் பயன்பெறலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

தகுதியான பயனாளிகளை அடையாளம் காண, உஜ்வாலா திட்டத்தின் கீழ் எரிவாயு இணைப்பு பெற்றவர்கள், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெறும் குடும்பங்கள்



மற்றும் ஆண்டுக்கு ரூ.2.50 லட்சம் வரை வருமானம் உள்ள குடும்பங்களின் விவரங்கள் பரிசீலிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

சிலிண்டருக்கான தொகையைப் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்துவது குறித்தும் ஆலோசனை நடைபெறுகிறது. அரசு நலத்திட்டத் தரவுகளுடன், குடும்பங்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறுவது குறித்தும் பரிசீலிக்கப்படுகிறது. பயனாளிகள் தேர்வு மற்றும் திட்டச் செயலாக்கம் தொடர்பான இறுதி விவரங்கள் இன்னும் வெளியாகவில்லை.

பிட்காயின் முதலீட்டாளர்கள் தலையில் துண்டு..!!



உலகின் மிகப்பெரிய கிரிப்டோகரன்சியான பிட்காயின், 57,000 டாலருக்குக் கீழே சரிந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 8%–க்கும் மேல் வீழ்ந்த அதன் விலை, தற்போது சுமார் 56,940 டாலராக உள்ளது. 2024–ல் எட்டிய 126,198 டாலர் உச்சத்துடன் ஒப்பிடும்போது இது 55% குறைவு; கடந்த 30 நாட்களில் மட்டும் சுமார் 29% சரிந்துள்ளது.

அமெரிக்காவில் பொருளாதார நிச்சயமற்ற நிலை, டாலர் மதிப்பு உயர்வு, வட்டி விகித உயர்வு குறித்த எதிர்பார்ப்பு ஆகியவை முதலீட்டாளர்களை கிரிப்டோ முதலீடுகளிலிருந்து விலகச் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. அரசியல் மாற்றங்களால் கிரிப்டோ தொடர்பான முன்மொழிவுகள் நிறைவேறுவது குறித்த கவலையும் விற்பனை அழுத்தத்தை அதிகரித்துள்ளது.

யு.பி.எஸ்.சி. முதன்மைத் தேர்வில் வெற்றி: தமிழக மாணவர்களுக்கு ரூ.50,000



சென்னை, நவ. 22–

2026–ஆம் ஆண்டு யு.பி.எஸ்.சி. குடிமைப் பணிகள் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டு மாணவர்களுக்கு, தமிழக அரசின் ஊக்கத்தொகைத் திட்டத்தின் கீழ் ரூ.50,000 வழங்கப்படுகிறது. தகுதியுள்ளவர்கள் நவம்பர் 21 முதல் 30–ஆம் தேதி வரை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். தொகை மாணவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும்.



தலையங்கம்
மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 22.11.2026
பராபவ தமிழ் வருடம்
கார்த்திகை மாதம் 06-ம் தேதி

அக்னிவீரருக்கு அங்கீகாரம்!



அக்னிவீர் திட்டத்தின் கீழ் பணியில் சேர்ந்தவர்களுக்கு, நான்காண்டு சேவைக்குப் பிறகு மேலும் இரண்டு ஆண்டுகள் பணியாற்றும் வாய்ப்பை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. பயிற்சி பெற்ற வீரர்களைத் தக்கவைத்து, ராணுவத்தின் செயல்பாட்டுத் திறனை வலுப்படுத்தும் நோக்கில் இந்த மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022–ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கப்பட்ட அக்னிவீர் திட்டத்தின்படி, தேர்வானவர்கள் நான்காண்டுகள் பணியாற்றுவர். அந்தக் காலம் நிறைவடைந்ததும், தகுதி மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் 25 சதவீதம் பேர் நிரந்தரப் பணியில் சேர்க்கப்படுவர். பணியில் தொடர விரும்பும் மற்றவர்களுக்கு, தற்போது கூடுதலாக இரண்டாண்டுகள் பணியாற்றும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. இந்த இரண்டாவது பணிக்காலத்தை நிறைவு செய்த பின்னர், நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விருப்பமுள்ள அக்னிவீரர்களுக்கு நிரந்தரப் படையில் சேர வாய்ப்பு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் பணிக்காலத்தில் அக்னிவீரர்களுக்கு மேம்படுத்தப்பட்ட மாத ஊதியம் வழங்கப்படும். முதல் ஆண்டில் ரூ.43,500–ம், இரண்டாவது ஆண்டில் ரூ.47,500–ம் ஊதியமாக வழங்கப்படும். சேவா நிதித் திட்டத்துக்கான அரசின் பங்களிப்பும் உயர்த்தப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. ஆறு ஆண்டுகள் பணியை நிறைவு செய்து, ராணுவத்திலிருந்து வெளியேறுவோருக்கு, திரட்டப்பட்ட வட்டியைத் தவிர்த்து, வருமானவரி விலக்குடன் ரூ.10.92 லட்சம் சேவா நிதி கிடைக்கும்.

பணியின் போது உயிரிழக்கும் அக்னிவீரர்களின் குடும்பத்தினருக்கு காப்பீடு, கருணைத் தொகை மற்றும் பிற உதவிகள் அடங்கிய இழப்பீட்டுத் தொகுப்பு வழங்கப்படும். பணிமூப்பு பாதுகாக்கப்படும் என்றும், நிரந்தரப் பணியில் இணையும் வீரர்களுக்கு பதவி உயர்வு மற்றும் பணிவளர்ச்சிக்கான வாய்ப்புகள் தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் பெண்களுக்கான ராணுவப் பணிவாய்ப்புகளையும் விரிவுபடுத்தியுள்ளது. மேலும், நீண்டகாலமாக ஆட்சேர்ப்பு நடைபெறாத நேபாள கூர்க்கா வீரர்களின் சேர்க்கையை மீண்டும் தொடங்குவதற்கும் புதிய மாற்றங்கள் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசிரியர்: மதுரை மணி

தொகுதி மறுவரையறைக்கு ஆதரவளிக்க எம்.பி.க்களுக்கு தலா ரூ. 150 கோடி பேரம் பேசும் பாஜக?



புதுடெல்லி, நவ. 22–

தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு ஆதரவளிக்க எம்.பி.க்களுக்கு ரூ. 150 கோடி வரையில் பேரம் பேசப்படுவதாக பாஜக மீது சிவசேனை (உத்தவ்) குற்றம் சாட்டியுள்ளது. கடந்த ஏப்ரல் மாதத்தில் தொகுதி மறுவரையறை மற்றும் மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை மத்திய பாஜக அரசு அறிமுகப்படுத்திய நிலையில், பெரும்பான்மை ஆதரவு கிடைக்காததால் மசோதா நிறைவேற்றப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து, இவ்விரு மசோதாக்களையும் நிறைவேற்ற பாஜக அரசு தொடர்ந்து தீவிரம் காட்டி வருகிறது. இந்த நிலையில், தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு ஆதரவு திரட்ட எம்.பி.க்களிடம் பேரம் பேசப்படுவதாக சிவசேனை (உத்தவ்) எம்.பி. சஞ்சய் ராவத் குற்றம் சாட்டியுள்ளார். இதுகுறித்து மகாராஷ்டிர மாநிலம் சத்ரபதி சம்பாஜிநகரில் செய்தியாளர்களுடன் அவர் பேசியதாவது, "தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு ஆதரவளிக்க எம்.பி.க்களிடம் பேரம் பேசி வருகின்றனர். இரு நாள்களுக்கு முன்னர் ரூ. 100 கோடியாக இருந்த பேரம், இப்போது ரூ. 150 கோடியாக உயர்ந்துள்ளது. மாநிலத்தின் முக்கிய தலைவர்களுக்கு இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சர் அமித் ஷா ஏன் அடிக்கடி மும்பை வருகிறார்? இங்கு அப்படி என்ன பரிவர்த்தனைகள் நடைபெறுகின்றன? 5 ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு எம்எல்ஏ ரூ. 50 கோடிக்கும், ஒரு எம்.பி. ரூ. 75 கோடிக்கும் விலைக்கு வாங்கப்பட்டனர். இப்போது ரூ. 150 கோடியாக உயர்ந்துள்ளது. இது ஒரு நல்ல விலைதான். துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவுடனான ஒப்பந்தத்தின்கீழ், சிவசேனை (உத்தவ்) கட்சியில் இருந்து விலகிய 6 எம்.பி.க்களுக்கு தலா ரூ. 80 கோடி வழங்கப்பட்டது. இங்கு அரசியல் தேசிய பங்குச் சந்தைபோல் நடக்கிறது" என்று தெரிவித்தார்.

ஆன்மிக நிகழ்ச்சிகளில் தனிநபர் துதிக்குத் தடை!



திருச்செந்தூர், நவ. 22–

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கந்தசஷ்டி திருவிழாவில் சிகர நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் கடந்த 15–ந் தேதி நடந்தது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற பாடகர்கள் புஷ்பவனம் குப்புசாமி, வேல்முருகன் ஆகியோர் முதல்–அமைச்சருக்கு அரோகரா, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருக்கு அரோகரா என்று கோஷம் எழுப்பினார்கள்.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. பல்வேறு அரசியல் கட்சியினர், இந்து அமைப்புகளும் கண்டனம் தெரிவித்தன. போலீசிலும் புகார் அளிக்கப்பட்டது. இதையடுத்து 2 பாடகர்களும் வருத்தமும், விளக்கமும் அளித்தனர். இந்த நிலையில் திருச்செந்தூர் கோவிலில் ஆன்மிக நிகழ்ச்சிகளில் தனிநபர் துதிப்பாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கோவில் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:–

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெற்ற சூரசம்ஹார நிகழ்ச்சியின்போது, ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த பக்தி இன்னிசை நிகழ்ச்சியில் பங்கேற்ற பாடகர்கள் எழுப்பிய சில கோஷ வாக்கியங்கள், பொது வெளியில் ஏற்படுத்திய விமர்சனங்கள், கோவிலின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவதாக அமைந்துவிட்ட படியால்,

இனிவரும் காலங்களில், கோவிலால் ஒழுங்கு செய்யப்படும் ஆன்மிக நிகழ்ச்சிகள் மற்றும் பக்தி இன்னிசை நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் கலைஞர்கள் இறைபக்தி வசனங்கள் மற்றும் இறைபக்திப் பாடல்களைத் தவிர ஆன்மிகத்துக் குத் தொடர்பில்லாத எந்தவொரு கோஷத்தையோ, தனி மனிதத் துதிபாடல்களையோ கட்டாயம் தவிர்த்து விட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தால் வெறிச்சோடிய காசிமேடு மீன் சந்தை!



சென்னை, நவ. 22–

சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் மீனவர்கள் நடத்தி வரும் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் இன்று 4–வது நாளாக தொடர்வதால், காசிமேடு மீன் சந்தை வெறிச்சோடிக் காணப்படுகிறது. மீன்கள் வரத்து குறைந்துள்ள நிலையில் ஏற்கனவே பிடித்து வைக்கப்பட்டு இருந்த மீன்களை வைத்து பெண்கள் விற்பனை செய்து வருகின்றனர்.

வழக்கமாக ஞாயிற்றுக்கிழமைகளில் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழியும் காசிமேடு சந்தை, இன்று ஆள் நடமாட்டமின்றி வெறிச்சோடியுள்ளது. தினசரி சுமார் 100 டன் கடல் உணவு வரத்து பாதிக்கப்பட்டுள்ளதால், சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் மீன் விலை 50 சதவீதத்திற்கும் மேல் உயர்ந்துள்ளது. காசிமேடு துறைமுகத்தில் உள்ள சுமார் 800–க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடலுக்குச் செல்லாமல் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு வருகிற 24–ம் தேதி விசாரணைக்கு வரவுள்ள நிலையில், தங்களது கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என சென்னை விசைப்படகு மீனவர் நலச் சங்கம் தெரிவித்துள்ளது.

திருச்செந்தூரில் மாணவி கொலை!



திருச்செந்தூரில் வீட்டில் தனியாக இருந்த 11–ம் வகுப்பு மாணவி கத்தியால் குத்திக் கொல்லப்பட்டதாகத் தகவல். முத்துராஜா என்ற இளைஞர் இந்தக் கொலையைச் செய்ததாகக் கூறப்படுகிறது. மாணவியும் இளைஞரும் காதலித்து வந்ததாகவும், மாணவி வேறொருவருடன் பேசுவதாகச் சந்தேகப்பட்டு அவர் தாக்கியதாகவும் முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

பழனி அருகே நெய்க்காரப்பட்டியில்

கனிம வளங்கள் எடுத்துச் செல்லப்படுவது குறித்து சப்-கலெக்டர் பிரியங்கா நேரில் ஆய்வு!



பழனி நவம்பர் 22–

திண்டுக்கல் மாவட்டம், பழனி அருகே நெய்க்காரப்பட்டி பகுதியில் அனுமதி பெற்று கனிம வளங்கள் எடுத்துச் செல்லப்படுவது குறித்து, பழனி கோட்டாட்சியர் பிரியங்கா தலைமையில் அதிகாரிகள் நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

உடன் வட்டாட்சியர் சஞ்சய் காந்தி மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் இருந்தனர்.

இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற குவாரிகள் தொடர்பான கருத்துக் கேட்புக் கூட்டத்தில் விவசாயிகள் முன்வைத்த கோரிக்கைகளைத் தொடர்ந்து, இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விளம்பர வெறியால் டெல்டாவில் கருகும் பயிர்கள்: உதயநிதி!



சென்னை, நவ. 22–

விளம்பர வெறியால் டெல்டா மாவட்டங்களில் பயிர்கள் கருகி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது:

"டம்மி முதல்வரின் விளம்பர வெறியால் டெல்டாவில் கருகும் பயிர்கள். விவசாயிகள் துயர் துடைக்க உடனே வறட்சி நிவாரணம் அறிவிக்க வேண்டும்! இந்த சோப்ளாங்கி ஆட்சியாளர்கள் ஜூன் 12–ஆம் தேதி மேட்டூர் அணையை திறக்காமல் விட்டதால் குறுவை பொய்த்தது.

சம்பா சாகுபடிக்கு சரியான நேரத்தில் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்ற விவசாயிகள் – தி.மு.க உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் பேச்சை கேட்காமல், இந்த டம்மி முதல்வர், ரீல்ஸ் வெறியோடு முன்கூட்டியே செப்டம்பர் 1 அன்று தண்ணீர் திறந்துவிட்டார்.

அதனால், இப்போது தண்ணீரின்றி டெல்டாவில் பயிர்கள் கருகுகின்றன.

இந்த நிலை ஏற்படக்கூடும் – முன்னெச்சரிக்கை நடவடிக்கை தேவை என்று கடந்த மாதமும் – அதற்கு முன்பும் இரண்டு முறை இந்த சர்க்கஸ் அரசை எச்சரித்தோம்.

ஆனால், எதிர்க்கட்சிகளின் ஆலோசனைகளை ஏற்கவோ, காது கொடுத்து கேட்கவோ கூடாது எனும் இந்த கோமாளி ஆட்சியாளர்களின் வெட்டி ஈகோவால், விவசாயிகள் இன்று துயரில் நிற்கிறார்கள்.

ஏற்கனவே, முழுப்பயிர்க்கடன் தள்ளுபடி என்று சொல்லி விவசாயிகளை ஏமாற்றியது போல், இப்போதும் ஏமாற்றாமல், பயிர்ச்சேதம் தொடர்பாக வெளிப்படையான கள ஆய்வை இந்த அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகளின் கவலையில் கன்டென்ட் தேறுமா என்று பார்க்காமல், அவர்களின் கண்ணீர் துடைக்கும் வகையில் தாமதமின்றி வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

வீட்டு உபயோக சமையல் எரிவாயுக்கான புதிய இணைப்பு வழங்கப்படுமா? மக்கள் எதிர்பார்ப்பு!



சென்னை, நவ. 22–

நிகழாண்டு பிப்.28 –ஆம் தேதி ஈரான் மீது அமெரிக்கா தாக்குதலை தொடங்கியது. இந்தப் போர் தொடந்து நீடித்து வருகிறது. இதன் காரணமாக ஹார்மூஸ் நீர் ஜலசந்தி மூடப்பட்டது. அந்தப் பகுதி வழியாகச் செல்லும் சரக்கு கப்பல் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் எரிவாயு மற்றும் கச்சா எண்ணெய் கொண்டுவரும் கப்பல்கள் தடுத்து நிறுத்தப்பட்டன. மேலும், மத்திய கிழக்கு நாடுகளில் போர்ப் பதற்றம் ஏற்பட்டதால் சமையல் எரிவாயு, கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டது. இதன் காரணமாக பல நாடுகளில் சமையல் எரிவாயு, பெட்ரோல் விலை கடுமையாக உயர்ந்ததுடன், தட்டுப்பாடும் ஏற்பட்டது. போர்ப் பதற்றம் காரணமாக இந்தியாவு க்கான எரிவாயு மற்றும் கச்சா எண்ணெய் இறக்குமதி பெருமளவில் பாதிக்கப்பட்டது. இதையடுத்து வணிக சமையல் எரிவாயு, வீட்டு உபயோக சமையல் எரிவாயு விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில், புதிய வீட்டு உபயோக சமையல் எரிவாயு இணைப்பு வழங்குவது நிகழாண்டு மார்ச் மாதம் முதல் நிறுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, வீட்டு உபயோக சமையல் எரிவாயு இணைப்பு சரிபார்ப்பு பணியை எண்ணெய் நிறுவனங்கள் தொடங்கின. அதன்படி வீட்டு உபயோக சமையல் எரிவாயு இணைப்புப் பெற்றவர்கள் ஆதாருடன் இணைத்தால்தான் வீட்டு உபயோக சமையல் எரிவாயு வழங்க வேண்டும் என உத்தரவிட்டது. ஒரே குடும்பத்தில் ஒரே பெயரில் எத்தனை இணைப்புகள் உள்ளன என்பது குறித்து கண்டறியப்பட்டு அவை நீக்கப்பட்டன.

தமிழகத்தில் உள்ள சமையல் எரிவாயு இணைப்பு: இந்தியன் ஆயில் நிறுவனத்தின் மூலம் 1.30 கோடி இணைப்புகளும் , பாரத் பெட்ரோலிய நிறுவனம் மூலம் 67 லட்சம், ஹிந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனம் மூலம் 43 லட்சம் என தமிழகத்தில் 2.40 கோடி சமையல் எரிவாயு இணைப்புகள் உள்ளன. பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா திட்டத்தின் கீழ் ஐஓசி மூலம் 22.71 லட்சம், பிபிசி மூலம் 9.1 லட்சம், ஹெச்பிசி மூலம் 10.2 லட்சம் என 42.1 லட்சம் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆதார் சரிபார்ப்பு: இதுகுறித்து இந்தியன் ஆயில் நிறுவன அதிகாரி கூறுகையில், 'தமிழகத்தில் எண்ணெய் நிறுவனங்களில் மூலம் வழங்கப்பட்டுள்ள சமையல் எரிவாயு இணைப்பு ஆதாருடன் இணைக்கும் பணி 95 சதவீதம் முடிவு பெற்றுள்ளது. இருப்பினும் விடுப்பட்டுள்ள வாடிக்கையாளர்களின் ஆதாருடன் இணைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறன்றன. இந்தப் பணி வரும் டிசம்பர் மாதத்துக்குள் முடிக்கப்படும். மேலும், புதிய சமையல் எரிவாயு இணைப்பு வழங்குவது குறித்து மத்திய அரசின் உத்தரவு வந்தவுடன் வழங்கப்படும்' என்றார் அவர்.



பணம் தங்கவில்லையா? வாஸ்து வழிகள்!



கடினமாக உழைத்து வருமானம் ஈட்டினாலும், சிலரால் அதைச் சேமிக்கவோ தேவைக்கேற்ப பயன்படுத்தவோ முடியாமல் போகிறது. வீட்டின் அமைப்பும் சுற்றுப்புறமும் மனநிலையைப் பாதிக்கலாம் என்ற வாஸ்து நம்பிக்கையின் அடிப்படையில், வீட்டைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருக்க சில எளிய வழிகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

பிரதான வாசலைச் சுத்தமாக வைத்திருங்கள்: வீட்டின் பிரதான வாசல் வழியாக நேர்மறை ஆற்றல் வருவதாக வாஸ்து நம்பிக்கை கூறுகிறது. எனவே வாசல் பகுதியில் குப்பை, தேவையற்ற பொருட்கள், உடைந்த பொருட்கள் ஆகியவற்றைச் சேர்த்து வைக்காமல் சுத்தமாக வைத்திருக்கலாம். போதிய வெளிச்சமும் காற்றோட்டமும் இருப்பதையும் கவனிக்க வேண்டும்.

உடைந்த பொருட்களை அகற்றுங்கள்: பயன்படுத்த முடியாத பாத்திரங்கள், உடைந்த கண்ணாடிகள், ஓடாத கடிகாரங்கள், பழுதடைந்த மின்னணுச் சாதனங்கள் போன்றவற்றை நீண்டகாலம் வீட்டில் வைத்திருக்க வேண்டாம் என வாஸ்து அறிவுறுத்துகிறது. அவற்றைச் சரிசெய்ய முடியாவிட்டால், பாதுகாப்பாக அகற்றிவிட்டு வீட்டை ஒழுங்குபடுத்தலாம்.

கல் உப்பு கலந்த நீரால் துடைக்கலாம்: வாரத்திற்கு ஒருமுறை வீட்டைத் துடைக்கும் நீரில் சிறிதளவு கல் உப்பு சேர்ப்பது எதிர்மறை ஆற்றலைக் குறைக்கும் என்பது வாஸ்து நம்பிக்கை. குறிப்பாக வீட்டின் மூலைகளையும் கவனமாகச் சுத்தம் செய்யலாம்.

வடக்குப் பகுதியை ஒழுங்காக வையுங்கள்: வடக்கு திசை குபேர திசையாகக் கருதப்படுவதால், அந்த இடத்தில் தேவையற்ற பொருட்களையும் கனமான பொருட்களையும் குவிக்காமல் திறந்தும் சுத்தமாகவும் வைத்திருக்கலாம்.

மாலையில் விளக்கேற்றுங்கள்: மாலை நேரத்தில் வீட்டைச் சுத்தம் செய்து விளக்கேற்றி வழிபடுவது அமைதியான சூழலை உருவாக்கும் என நம்பப்படுகிறது.

இதனுடன், மாதத் தொடக்கத்தில் வருமானம், அவசியச் செலவுகள், கடன் தவணைகள், அவசரத் தேவைகள் ஆகியவற்றைக் கணக்கிட்டு பட்ஜெட் அமைப்பது முக்கியம். செலவுகளைப் பதிவு செய்து, வருமானத்தில் ஒரு பகுதியைத் தொடர்ந்து சேமிக்க முயலுங்கள். வாஸ்து வழிமுறைகள் நம்பிக்கை சார்ந்தவை; சேமிப்பை வளர்க்கத் திட்டமிட்ட செலவுப் பழக்கமும் நிதி ஒழுங்கும் உதவும்.

ஓட்டன்சத்திரம் பழைய காந்தி மார்க்கெட்டில் விபத்து அபாயம்!



ஓட்டன்சத்திரம், நவ. 22–

திண்டுக்கல் மாவட்டம், ஓட்டன்சத்திரம் பழைய காந்தி மார்க்கெட்டுக்கு தினமும் ஏராள மானோர் வந்து செல்கின்றனர். வாகனங்கள் வேகமாகச் செல்வதால், சந்தை யின் இரு நுழைவாயில்களிலும் சாலையைக் கடக்கும் பொதுமக்களுக்கு விபத்து அபாயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. எனவே, அசம்பாவிதங்கள் நிகழும் முன் இரு நுழைவாயில்களிலும் வேகத்தடைகள் அமைக்க நகராட்சி மற்றும் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பழனியில் லட்சுமி நாராயண பெருமாள் கோவில் வருடாபிஷேகம்!



பழனி நவம்பர் 22 –

பழனியில் லட்சுமி நாராயண பெருமாள் கோவிலில் வருடாபிஷேகம் நடைபெற்றது. பழனி முருகன் கோவிலின் உபகோவில் லட்சுமி நாராயண பெருமாள் கோவில் ஆகும். இக்கோவிலில் லட்சுமி நாராயண பெருமாள் சன்னதி, சக்கரத்தாழ்வார் சன்னதி, ஆஞ்சநேயர் சன்னதி, உள்ளது. இக்கோவிலில் உபயதாரர் கந்த விலாஸ் அதிபர் என். செல்வகுமார் ஏற்பாட்டின் பேரில், வருடாபிஷேகம் நடைபெற்றது. முன்னதாக கோவிலின் சன்னதியின் முன்பு புனித கலசங்கள் வைத்தும், யாக குண்டம் வைத்தும், சிறப்பு யாகம் நடைபெற்றது. கார்த்திக் ஐயங்கார், கோபாலகிருஷ்ணன் பட்டர் ஆகியோர் தலைமையில், வேத மந்திரங்கள் கூறப்பட்டது. இதில் திருப்பாவை திருவெம்பாவை பாடல்கள் பாடப்பட்டது. பின்பு லட்சுமி நாராயண பெருமாள், சக்கரத்தாழ்வார், ஆஞ்சநேயர் ஆகியோர்களுக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரம் தீபாராதனை நடைபெற்றது.

அதன் பின்பு கருடாழ்வார் வாகனத்தில் லட்சுமி நாராயண பெருமாள் மேளதாளம் முழங்க அழைத்துவரப்பட்டார். இதில் உபயதாரர்கள் கந்த விலாஸ் என்.செல்வகுமார், எஸ் நவீன் விஷ்ணு, எஸ் நரேஷ் குமரன், தமிழக வெள்ளாளர் பேரவை நிர்வாகிகள் பேராசிரியர் சோம சுந்தரம், ராஜாமணி, துரைசாமி, அழகேசன், படக்கடை வீரா ச்சாமி, மதுரை வீரன், குமரேசன் மற்றும் ஆர்.சண்முகநாதன், பில்டிங் காண்ட்ராக்டர் நேரு, பெரியநாயகி கல்வி அறக்கட்டளை சுந்தரம, அதிமுக நகர செயலாளர் முருகானந்தம், முன்னாள் கோவில் சூப்பிரண்டு நெய்க்காரப்பட்டி முருகேசன், கோவில் கண்காணிப்பாளர் அழகர்சாமி உள்ளட ஏராளமானவர்கள் பங்கேற்றனர்,

நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



காலையில் வாயில் கசப்புச் சுவையா? காரணங்களும் தடுக்கும் வழிகளும்!



தூங்கி எழுந்ததும் வாயில் கசப்பான அல்லது விரும்பத்தகாத சுவை ஏற்படுவது, இரவில் உமிழ்நீர் சுரப்பு குறைந்து வாய் வறண்டு போவதால் இருக்கலாம். இது சிலருக்கு தண்ணீர் குடித்ததும் அல்லது பல் துலக்கியதும் சரியாகிவிடும். ஆனால், அடிக்கடி ஏற்பட்டால் கவனிக்க வேண்டும் என மருத்துவர் அறிவுறுத்துகிறார்.

வயிற்று அமிலம் மேலேறுதல், பற்கள் மற்றும் நாக்கைச் சரியாகச் சுத்தம் செய்யாதது, ஈறு பிரச்சினைகள், சைனஸ் தொற்று, சில மருந்துகளின் பக்கவிளைவுகள் ஆகியவையும் சுவை மாற்றத்துக்குக் காரணமாகலாம்.

தடுக்கும் வழிகள்: நாள் முழுவதும் போதுமான தண்ணீர் குடிக்கவும். தினமும் இருமுறை பல் துலக்கி, நாக்கையும் மென்மையாகச் சுத்தம் செய்யவும். தூங்குவதற்கு சற்று முன் கனமான உணவு சாப்பிடுவதைத் தவிர்க்கவும். மருந்து உட்கொண்ட பிறகு சுவை மாறினால், அதைத் தானாக நிறுத்தாமல் மருத்துவரிடம் ஆலோசனை பெறவும்.

கசப்புச் சுவை அடிக்கடி ஏற்பட்டாலோ நாள் முழுவதும் நீடித்தாலோ, அல்லது நெஞ்செரிச்சல், விழுங்குவதில் சிரமம், வாய்ப்புண்கள் போன்ற அறிகுறிகள் இருந்தாலோ மருத்துவரை அணுகுவது நல்லது.

மேல்மருவத்தூரில் 114 ரயில்கள் நிறுத்தம்!



சென்னை, நவ. 22–

இருமுடி மற்றும் தைப்பூசத் திருவிழாக்களுக்காகப் பயணிக்கும் பக்தர்களின் வசதிக்காக, மேல்மருவத்தூர் ரயில் நிலையத்தில் 114 விரைவு ரயில்கள் தற்காலிகமாக நின்று செல்லும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

டிசம்பர் 4 முதல் 31–ஆம் தேதி வரை 57 ரயில்களும், ஜனவரி 2 முதல் 21–ஆம் தேதி வரை மேலும் 57 ரயில்களும் குறிப்பிட்ட பயண நாட்களில் நின்று செல்லும். ஒவ்வொரு ரயிலும் நிலையத்தில் இரண்டு நிமிடங்கள் நிற்கும்.

சென்னை எழும்பூர், தாம்பரம் உள்ளிட்ட இடங்களிலிருந்து இயக்கப்படும் திருச்சி, மதுரை, செங்கோட்டை, மன்னார்குடி, ராமேசுவரம், நாகர்கோவில், சேலம், கொல்லம், காரைக்கால் வழித்தட ரயில்கள் இதில் இடம்பெற்றுள்ளன. தென் மாவட்டங்களிலிருந்து சென்னை மற்றும் பிற மாநிலங்களுக்குச் செல்லும் சில ரயில்களுக்கும் இந்த நிறுத்த வசதி அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்களின் நிறுத்தம் குறிப்பிட்ட பயணத் தேதிகளுக்கு மட்டுமே பொருந்தும். பயணிகள் தங்கள் ரயிலின் தேதி மற்றும் நேரத்தை தெற்கு ரயில்வே அட்டவணையில் சரிபார்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சினிமா துளிகள்..!

அன்று முதல் இன்று வரை மாறாத காதல்: காரில் காதலுடன் பயணித்த அஜித்-ஷாலினி ஜோடி...!



தமிழ் திரையுலகின் மிகவும் விரும்பப்படும் நட்சத்திரத் தம்பதியான அஜித்குமார் – ஷாலினி இணைந்து காரில் லாங் டிரைவ் சென்ற அழகிய தருணத்தை நடிகை ஷாலினி தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். இந்த வீடியோ தற்போது ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று இணையத்தில் வைரலாகி வருகிறது. நடிகை ஷாலினி தனது அதிகாரப்பூர்வ இன்ஸ்டாகிராம் பக்கத்தில், கணவர் அஜித் குமாருடன் காரில் பயணிக்கும் வீடியோ ஒன்றைப் பதிவிட்டுள்ளார். அந்த வீடியோவிற்குக் கீழே, “Music, love & a long drive..” (இசை, காதல் மற்றும் ஒரு நீண்ட பயணம்) என அன்புடன் அவர் குறிப்பிட்டுள்ள வாசகம் ரசிகர்களின் மனதை வெகுவாகக் கவர்ந்துள்ளது. ஷாலினி வீடியோ எடுக்கும் போது பின்னணியில் காதல் பாடல் பாட... அஜித்குமார் ‘I LOVE YOU’ என்று கூற.. பார்க்கவே அழ கான தருணமாக இருந்தது.

டி.கே.சிவக்குமார் 3 நாட்கள் ஜப்பான் சுற்றுப்பயணம்..!



பெங்களூரு, நவ. 22–

கர்நாடக மாநிலத்திற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் முதல்–மந்திரி டி.கே.சிவக்குமார் 3 நாட்கள் சுற்றுப்பயணமாக ஜப்பான் செல்கிறார். இதற்காக அவர் இன்று பெங்களூருவில் இருந்து விமானம் மூலம் ஜப்பான் புறப்பட்டு செல்கிறார்.

இந்த பயணத்தின் போது அவர் இன்று நகோயா நகரிலும், நாளை (திங்கட்கிழமை) ஒசாகா நகரிலும், 25–ந் தேதி டோக்கியோ நகரிலும் தொழில் முதலீட்டாளர்களை நேரில் சந்தித்து ஆலோசனை நடத்துகிறார். அப்போது கர்நாடகத்தில் தொழில் தொடங்குவதற்கான முக்கிய முதலீட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, தொழில்துறை மந்திரி எம்.பி.பட்டீல் தலைமையிலான உயர்மட்ட அதிகாரிகள் குழுவினர் ஏற்கனவே ஜப்பான் சென்றுள்ளனர். இதில் தொழில்துறை முதன்மை செயலாளர் செல்வகுமார், பெருநகர பெங்களூரு ஆணைய கமிஷனர் மகேஸ்வர்ராவ் உள்ளிட்டோரும் இடம் பெற்றுள்ளனர். அங்கு டி.கே.சிவக்குமார் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்கும் பணியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கர்நாடகத்தில் அடுத்த ஆண்டு ஏப்ரல் 20–ந் தேதி முதல் 22–ந் தேதி வரை உலக முதலீட்டாளர்கள் மாநாடு பிரமாண்டமாக நடக்கிறது. இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வருகை தருமாறு ஜப்பான் தொழில் நிறுவனங்களுக்கு டி.கே.சிவக்குமார் நேரில் அழைப்பு விடுக்க உள்ளார்.

தண்டவாளங்களில் “ஏஐ” கேமரா அமைக்க கேரள அரசுக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவு..!



திருவனந்தபுரம், நவ. 22–

தமிழ்நாடு அரசை பின்பற்றி, ரெயில் மோதி யானைகள் பலியா வதை தடுக்க, கேரள வனப்ப குதிகளில் ரெயில்வே தண்டவா ளங்களில் ‘ஏஐ’ கேமராக்களை 2 மாதங்களில் பொருத்த வேண்டும் என்று கேரள மாநில அரசுக்கு, ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு–கேரள வனப்பகுதியில் தண்டவாளங்களை கடக்கும் யானைகள், ரெயில் மோதி உயிரிழப்பதை தடுக்க நடவடிக்கை எடுக்கக்கோரி சென்னை ஐகோர்ட்டில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகள், நீதிபதிகள் என்.சதீஷ்குமார். ஜி.கே.முத்துகுமார் ஆகியோர் கொண்ட டிவிசன் பெஞ்சில் விசாரணைக்கு வந்தன. அப்போது கேரள அரசு தரப்பில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதில், “கேரளா வனப்பகுதியில் ரெயில் தண்டவா ளங்களை யானைகள் கடந்து செல்ல ஏதுவாக மூன்று சுரங்க பாதைகள் அமைக்க தெற்கு ரெயில்வே நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது. மதுக்கரை – கஞ்சிக்கோடு இடையே தண்டவா ளங்களை ஒட்டி தடுப்பு அமைப்பதற்கு டெண்டர் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளது” என்று விளக்கம் அளிக்கப்பட்டது.

, “ரெயில் மோதி யானைகள் பலியாவதை தடுக்க ‘ஏஐ’ தொழில்நுட்ப கேமராக்களை தமிழ்நாடு அரசு முதல் முறையாக பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளது. தமிழ்நாடு அரசை பின்பற்றி, யானைகள் ரெயில் மோதி பலியாவதை தடுக்க, கேரள வனப்பகுதிகளில் ரெயில் தண்ட வாளங்களில் ‘ஏஐ’ கேமராக்களை கேரள மாநில அரசு இரண்டு மாதங்களில் பொருத்த வேண்டும்.

மேலும் யானைகள் கடந்து செல்ல ஏதுவாக தண்டவாளங்களின் அடியில் சுரங்கப்பாதைகள் அமைக்க கேரள அரசு விரைந்து ஒப்புதல் வழங்க வேண்டும். இந்தப் பணிகளை முடித்தது தொடர்பாக ரெயில்வே துறை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். விசாரணையை வருகிற 2027–ம் ஆண்டு பிப்ரவரி 5–ந்தேதிக்கு தள்ளிவைக்கிறோம்” என்று உத்தரவிட்டனர்.

இங்கிலாந்து ஸ்காட்ச் விஸ்கிக்கு 150 சதவீதம் வரி விதிப்பு!



புதுடெல்லி, நவ. 22–

இந்தியா மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு இடையிலான விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் கடந்த ஜூலை மாதம் 15–ந்தேதி முதல் நடைமுறைக்கு வந்தது. இந்த ஒப்பந்தத்தின்படி, இந்தியாவில் ஸ்காட்ச் விஸ்கிக்கு இதுவரை விதிக்கப்பட்டு வந்த 150 சதவீத இறக்குமதி வரி 75 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. மேலும், அடுத்த 10 ஆண்டுகளில் இந்த வரியை படிப்படியாக 40 சதவீதமாகக் குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில், இங்கிலாந்தில் இருந்து மொத்தமாக இறக்குமதி செய்யப்பட்டு, இந்தியாவில் கலவை செய்து பாட்டிலில் அடைக்கப்படும் ஸ்காட்ச் விஸ்கி நிறுவனங்களுக்குப் புதிய வரிச் சிக்கல் உருவாகியுள்ளது. இந்திய சுங்கத்துறை இத்தகைய சரக்குகளை பானங்கள் தயாரிப்பதற்கான கலவை செய்யப்பட்ட மதுபானத் தயாரிப்பு’ என்ற வேறு வகைப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால், அந்த சரக்குகளுக்கு 150 சதவீதம் வரை வரி விதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, இங்கிலாந்தைச் சேர்ந்த முன்னணி மதுபான நிறுவனங்களின் சுமார் 80 முதல் 90 கன்டெய்னர் சரக்குகள் இந்தியத் துறைமுகங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இங்கிலாந்தில் இருந்து வரும் இந்த மொத்த சரக்கை ‘நேரடியாகப் பயன்படுத்தக்கூடிய முழுமையான விஸ்கி’ என்று கருதுவதா? அல்லது ‘இந்தியாவில் வேறு மதுபானங்களுடன் கலவை செய்வதற்கான மூலப்பொருள்’ என்று கருதுவதா என்பதில் தான் இந்தச் சர்ச்சை எழுந்துள்ளது.

இதனிடையே, வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட வரிச் சலுகை முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இங்கிலாந்து தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இரு நாட்டு அதிகாரிகளும் அவசரமாகப் பேச்சுவார்த்தை நடத்தி வரும் நிலையில், இந்த வரிச்சலுகை முழுமையாக நடைமுறைக்கு வருமா? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

ஒப்பந்தத்தின்படி ஸ்காட்ச் விஸ்கிக்கான வரி 75 சதவீதமாகக் குறைக்கப்பட்ட போதிலும், பாட்டிலில் அடைக்கப்பட்டு வரும் விஸ்கிக்கு மட்டுமே அந்தச் சலுகையை வழங்கிவிட்டு, பீப்பாய்களில் மொத்தமாக வரும் சரக்குகளுக்கு பழையபடியே 150 சதவீத வரி விதிக்கப்படுவது இரு நாடுகளுக்கும் இடையே புதிய வர்த்தக சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இபிஎஸ்–க்கு வேலுமணி அட்வைஸ்!



சென்னை, நவ. 22–

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் கடந்த சில நாட்களுக்கும் நடந்த திருமண நிகழ்ச்சியில் தவெக அமைச்சர் செங்கோட்டையனும், அதிமுக எம்.எல்.ஏ. எஸ்.பி.வேலுமணியும் சந்தித்து பேசினர். இதனிடையே, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கோவை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, அவரிடம் செங்கோட்டையன், எஸ்.பி.வேலுமணி சந்திப்பு குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த எடப்பாடி பழனிசாமி, அதிமுகவின் 2 கோடி உறுப்பினர்களில் எஸ்.பி.வேலுமணியும் ஒருவர். அவரை பற்றி இங்கு கேள்வி எழுப்ப வேண்டாம்’ என்றார்.

இந்நிலையில், ஒவ்வொரு தொண்டனின் குரலையும் கேட்பது தான் தலைமைக்கு அழகு என்று எஸ்.பி.வேலுமணி தெரிவித்துள்ளார்.

தலைமைக்கு அழகு

இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“2 கோடி தொண்டரின் ஒருவர் தான் வேலுமணி”

என்னை உதாசீனப் படுத்துவதாக எண்ணி அவர் சொல்லி இருந்தாலும், இதை விட எனக்கு வேறென்ன பெருமை இருக்கப் போகிறது ?

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டன் என்பது தான் என்னுடைய முதல் அடையாளம். இந்த இயக்கத்தின் கொடிபிடிக்கும் தொண்டன் என்பதை விட வேறு எந்தப் பதவியும் எனக்கு பெரிதல்ல.

என்னைத் #தொண்டரில்_ஒருவன் என்று சொன்ன பொதுச்செயலாளருக்கு நன்றி.

இந்த 2 கோடித் தொண்டர்களால் கொண்டுவரப்பட்டு தான் தாங்கள் இன்றைக்கு பொதுச் செயலாளர் பொறுப்பில் உள்ளீர்கள்.

கொடிபிடிக்கும் அந்த தொண்டன் தான் இந்த இயக்கத்தின் ஆணிவேர். அவன் ஆடினால் இந்த இயக்கம் ஆடும். அந்த தொண்டன் ஒரு முடிவை எடுத்துவிட்டால்..... என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். அதை ஒரு நல்ல தலைமை உணர வேண்டும்.

ஒவ்வொரு தொண்டனின் குரலையும் கேட்பது தான் ஒரு தலைமைக்கு அழகு.

கடைக்கோடி தொண்டன் பத்திரிகை வைத்தால், அந்த கல்யாணத்தில் எம்ஜிஆர் இருப்பார். கடைக்கோடி தொண்டனின் குரலுக்கு ஜெயலலிதாவின் கான்வாயே நிற்கும். பொறுப்பில் இருப்பவர்களை விட, இயக்கத்தை உயிராய் நேசித்த அந்த அடிப்படைத் தொண்டனைத் தான் நம் தலைவர்கள் அதிகம் நேசித்தார்கள்; மதித்தார்கள்!

“இந்த இயக்கத்தை நேசிக்கும் எல்லோரும் எந்த பிரிவினையும் இல்லாமல் ஒற்றுமையாக செயல்பட வேண்டும்” என்று சொல்வது வேலுமணி என்கிற ஒரு தொண்டன் மட்டுமா? இல்லையே– 2 கோடி தொண்டரில் யாரைக் கேட்டாலும் இதைத் தான் சொல்வார்கள்.

சசிகலா, டிடிவி தினகரன் ஆகியோர் தனி இயக்கம் ஆரம்பிக்கும் முன் பலமுறை அதிமுகவில் இணைந்து பணியாற்ற முன்வந்தார்கள்.

முன்னாள் முதல்–அமைச்சர் ஒ.பன்னீர்செல்வம், முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் ஆகியோர் திமுக–வுக்கு செல்லும் முடிவை எளிதாக எடுக்கவில்லை. அதற்கு முன் பலமுறை தங்களை ஆளாக்கிய இந்த இயக்கத்தில் பயணிக்க வேண்டும் என்று பல முயற்சிகளை எடுத்தார்கள்.

அதேபோல், இன்றைக்கு அமைச்சராக இருக்கும் செங்கோட்டையன், பேரவைத் தலைவராக உள்ள ஜே.சி.டி. பிரபாகர் உள்ளிட்ட பலர் அதிமுகவில் இணைந்து பயணிக்க பலமுறை முயற்சி எடுத்தும், நீங்கள் ஒரே ஒருவர் ஒப்புக்கொள்ளாமல் விடாப்பிடியாக இருந்ததால் தான் அவர்கள் எல்லாம் தமிழக வெற்றிக் கழகத்துக்கு சென்றார்கள்.

இப்படி, தங்களுக்கு அடையாளம் கொடுத்த இயக்கத்தை விட்டுக்கொடுக்காமல் வந்தவர்களை, எப்போதும் போல உதாசீனப் படுத்தி அனுப்பிவைத்து தான் இன்றைக்கு இந்த நிலைமையில் இருக்கிறோம் என்பதை ஒருகணம் உணர வேண்டும்.

பொதுச் செயலாளரிடம் எப்போதும் நான் கேட்பது என்று தான்– வேலுமணி உள்ளிட்ட அந்த 2 கோடி தொண்டர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்று ஒருமுறை காது கொடுத்துக் கேளுங்கள்.

“தாய்வழி வந்த
தங்கங்கள் எல்லாம்
ஓர்வழி நின்று
நேர்வழி சென்றால்
நாளை நமதே!”

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பு

சுகாதாரச் சங்கங்களில் 133 பணியிடங்கள்!

1. நாமக்கல் மாவட்ட சுகாதாரச் சங்கம்: 28 பணியிடங்கள்

பணிகள்: ஆயுஷ் மருத்துவ அலுவலர் (சித்தா), ஆயுஷ் மருந்தாளர், பல்நோக்கு பணியாளர், சிகிச்சை உதவியாளர், பெண் சிகிச்சை உதவியாளர், செவிலியர் சிகிச்சையாளர்/சிகிச்சை உதவியாளர், நகர்ப்புற நலவாழ்வு மைய மருத்துவ அலுவலர்.

பணியிடம்: நாமக்கல்

விண்ணப்பம் தொடங்கிய நாள்: 18.11.2026

கடைசி நாள்: 30.11.2026

பணி வகை: ஒப்பந்த அடிப்படை

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: namakkal.nic.in

2. தென்காசி மாவட்ட சுகாதாரச் சங்கம்: 28 பணியிடங்கள்

பணிகள்: கிராம சுகாதார செவிலியர் (ANM), சுகாதார ஆய்வாளர் நிலை–II, மருத்துவமனைப் பணியாளர், உடற்பயிற்சி சிகிச்சையாளர், உளவியலாளர், உதவி மருத்துவர், சிகிச்சை உதவியாளர், எக்கோ தொழில்நுட்ப வல்லுநர், LIMS தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர், காசநோய் சுகாதாரப் பார்வையாளர், மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்.

பணியிடம்: தென்காசி

விண்ணப்பம் தொடங்கிய நாள்: 18.11.2026

கடைசி நாள்: 03.12.2026

பணி வகை: ஒப்பந்த அடிப்படை

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: tenkasi.nic.in

3. தேனி மாவட்ட சுகாதாரச் சங்கம்: 77 பணியிடங்கள்

பணிகள்: நகர்ப்புற சுகாதார செவிலியர்/ANM, MLHP, பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்/சுகாதார ஆய்வாளர் நிலை–II, மருத்துவமனைப் பணியாளர், மருந்தாளர், இளநிலை உதவியாளர், பல்நோக்கு பணியாளர், சிகிச்சை உதவியாளர், காசநோய் சுகாதாரப் பார்வையாளர், சிறப்புக் கல்வியாளர், ஒலியியல் உதவியாளர், மூத்த சிகிச்சை மேற்பார்வையாளர், ஆலோசகர்.

பணியிடம்: தேனி

விண்ணப்பம் தொடங்கிய நாள்: 17.11.2026

கடைசி நாள்: 27.11.2026

பணி வகை: ஒப்பந்த அடிப்படை

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: theni.nic.in

ஞாயிறு கடைகள்; திலகர் திடலில் போக்குவரத்து ஸ்தம்பிப்பு!



மதுரை, நவ. 22–

திலகர் திடல் காவல் நிலையம்(C 4) அருகே, பாலத்தின் இறக்கத்திலும் கிருஷ்ணராயர் தெப்பக்குளத் தெரு, தமிழ்ச்சங்கம் சாலை யிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் கடைகள் அமைக்கப்படுகி ன்றன. அங்கு வரும் வாகனங்கள் முறையின்றி நிறுத்தப்ப டுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். விபத்து ஏற்படும் முன் நிரந்தரத் தீர்வு காணவும், ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்புப் போக்குவரத்துக் காவலர்களை நியமிக்கவும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொள்ளையர்கள் விட்டுச்சென்ற காரில் ரூ.1.14 கோடி ஹவாலா பணம் சிக்கியது!



கர்நாடகா, நவ. 22–

கர்நாடகாவில் இருந்து கேரள மாநிலம் வயநாட்டிற்கு காரில் சென்ற பாக்கு வியாபாரி அப்துல் கபீர் (வயது 37) மற்றும் டிரைவர் முகமது செரீப்(39) ஆகியோரை பந்தலூர் அருகே 4 பேர் கொண்ட கும்பல் வழிமறித்து, பணத்துடன் காரைக் கடத்திச் சென்றது.

போலீசாரைக் கண்டதும் மர்ம நபர்கள் காரை நடுரோட்டில் விட்டுவிட்டு தப்பினர். மீட்கப்பட்ட காரை போலீசார் சோதனையிட்டபோது, ரகசிய அறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த உரிய ஆவணங்கள் இல்லாத ரூ.1 கோடியே 14 லட்சம் ஹவாலா பணம் சிக்கியது. பணத்தை பறிமுதல் செய்த போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



இன்றைய கார்ட்டூன்



டெல்லியில் திறந்தவெளியில் குப்பைகளை எரித்தால் ரூ.10,000 அபராதம்!

புதுடெல்லி, நவ. 22–

டெல்லியில் திறந்தவெளியில் கழிவுகளை எரித்தால் ரூ.10,000 அபராதம் விதிக்கப்படும்.

டெல்லியில் கழிவுகளைத் திறந்தவெளியில் எரித்தால் ரூ.10,000 அபராதம் விதிக்க டெல்லி மாநகராட்சி முடிவெடுத்துள்ளது.

வீட்டுக் கழிவுகளைத் தரம் பிரிக்காமல் விடுவதற்கும், பொது இடங்களில் கழிவுகளைக் கொட்டுவதற்கும் படிப்படியான அபராத முறையை முன்மொழியும் விதிகளுக்கு டெல்லி மாநகராட்சி ஒப்புதல் அளித்தது. இறுதி ஒப்புதலுக்கு பின் இவை நடைமுறைக்கு வரும்.

புதிய விதிகளின்படி, திடக்கழிவுகளைத் திறந்தவெளியில் எரித்தால் ரூ.10,000, பொது இடங்களில் குப்பை கொட்டினால் ரூ.1,000, கழிவுகளை முறையாகக் கையாளாத வீடுகள் மற்றும் தெருவோர



சொத்துக்களுக்கு ரூ.10,000 அபராதமும், குப்பை கொட்டும் சரக்கு வாகனங்களுக்கு ரூ.5,000 அபராதமும் விதிக்கப்படும்.

அதேபோல், கழிவுகளை முறையாகக் கையாளாத உணவகங்களுக்கு ரூ.30,000, ஹோட்டல்களுக்கு ரூ.75,000 மற்றும் பேக்கேஜிங் கழிவுகளைச் சேகரிக்கும் முறையை அமைக்காத உற்பத்தியாளர்களுக்கு ரூ.1.5 லட்சம் வரை அபராதம் விதிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1ம் தேதி இந்த அபராதத் தொகையை 5% உயர்த்தவும் இந்த விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

டெல்லியில் காற்றின் தரம் தொடர்ந்து மோசமடைந்து, காற்றின் தரக் குறியீடும் அதிகரித்து வரும் வேளையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வியாபாரிகளுக்கு தலா ரூ.500 அபராதம் விதிக்கப்படும்.

மேலும், 5,000 சதுர மீட்டருக்கும் குறைவான பரப்பளவு கொண்ட திருமண மண்டபங்களுக்கு ரூ.15,000, சினிமா அரங்குகள் மற்றும் கிளப்புகளுக்கு ரூ.7,500, மற்ற வணிகம் அல்லாத நிறுவனங்களுக்கு ரூ.1,000 அபராதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கட்டுமானக் கழிவுகளை முறையற்றுக் கொட்டினால் குடியிருப்புகளுக்கு ரூ.2,000 மற்றும் வணிகச்

அரசின் கடன்களைக் குறைத்துக் காட்ட நெல் கொள்முதலை கைவிடுவதா?- அன்புமணி கேள்வி!

சென்னை, நவ. 22–

அரசின் கடன்களைக் குறைத்துக் காட்ட நெல் கொள்முதலை கைவிடுவதா என பாமக தலைவர் அன்புமணி கேள்வி எழுப்பினார். பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாடு அரசின் நேரடிக்கடன் மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவைத் தாண்டும் சூழல் உருவாகியுள்ள நிலையில், அதை சமாளிப்பதற்காக உழவர்களிடமிருந்து நெல் கொள்முதல் செய்யும் பொறுப்பை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து கூட்டுறவு அமைப்புகளுக்கு மாற்ற அரசு முடிவு செய்திருக்கிறது. கடன்களைக் கட்டுப்படுத்த முடியாத தமிழக அரசு, உழவர்களுக்கு பாதிப்பு ஏற்பட வழிவகுக்கக் கூடாது. தமிழ்நாட்டில் 1972&ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1973–ஆம் ஆண்டு முதல் காவிரி பாசன மாவட்டங்களிலும், 2002–ஆம் ஆண்டு முதல் மாநிலம் முழுவதும் பரவலாக்கப்பட்ட முறையிலும் உழவர்களிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்து வருகிறது. ஆனால், இந்தப் பணி விரைவில் கூட்டுறவுத் துறையின் டான்பெட் எனப்படும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திடம் (Tamil Nadu Co–operative Marketing Federation Limited –TANFED) ஒப்படைக்கப்படவு ள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதற்காக தமிழக அரசுத் தரப்பில் கூறப்படும் காரணங்கள் அதிர்ச்சியளிப்பவையாக உள்ளன. மாநில அரசின் நேரடிக் கடன் அதிகரித்து வரும் நிலையில், கடன் சுமையை அரசிடமிருந்து கூட்டுறவுத் துறைக்கு மாற்றும் நோக்குடன் தான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

நிதிப் பொறுப்புடமை மற்றும் நிதிநிலை மேலாண்மை சட்டத்தின்படி, ஓராண்டில் மாநில அரசால் வாங்கப்படும் நேரடிக் கடனின் அளவு அந்த மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 3 விழுக்காட்டைத் தாண்டக்கூடாது. 2026&27ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (GSDP) ரூ.40.67 லட்சம் கோடியாக



மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், அதில் 3%, அதாவது ரூ.1.21 லட்சம் கோடி மட்டும் தான் கடன் வாங்க முடியும்.

ஆனால், அதை விடக் கூடுதலாக கடன் வாங்க வேண்டியுள்ள நிலையில், நெல் கொள்முதலுக்கு தேவைப்படும் ரூ.11,000 கோடியை கூட்டுறவு அமைப்புகள் மூலம் கடன் வாங்கவே இந்த ஏற்பாட்டை தமிழக அரசு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

நெல் கொள்முதலை மத்திய அரசுக்காகத் தான் தமிழக அரசு மேற்கொள்கிறது. நெல் கொள்முதல் விலை மற்றும் அதை கையாளுவதற்காக ஆகும் செலவு முழுவதையும் தமிழக அரசுக்கு மத்திய அரசு கொடுக்கும்.

ஆனால், இதற்கு குறைந்தது 18 மாதங்கள் ஆகும் என்பதால் தான், அதற்கு தேவைப்படும் தொகையை நுகர்பொருள் வாணிபக் கழகம் கடன் வாங்க வேண்டியுள்ளது. நெல் கொள்முதலை டான்பெட் நிறுவனத்திடம் ஒப்படைத்தால், அதன் பேரில் கடன் வாங்கிக் கொள்ளலாம் என்பது தான் அரசின் திட்டமாகத் தெரிகிறது.

அதை உறுதி செய்யும் வகையில், மத்திய அரசின் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடம் ரூ.10,000 கோடி கடன் கோரி டான்பெட் நிறுவனம் விண்ணப்பம் செய்துள்ளது. டான்பெட் வாயிலாக கிராமப்புற தொடக்கக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நெல் கொள்முதல் செய்வதற்காக சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருவதாக உணவு மற்றும் கூட்டுறவுத் துறை செயலாளர் அமுதா தெரிவித்திருப்பதும் அரசின் நிலை மாற்றத்தை உறுதி செய்துள்ளது.

மேலோட்டமாகப் பார்த்தால், நெல் கொள்முதலை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தினாலும், டான்பெட் நிறுவனம் நடத்தினாலும் ஒன்று தானே? என்று தோன்றக் கூடும். ஆனால், இது நெல் கொள்முதல் கட்டமைப்பையே சிதைத்து விடக் கூடும். டான்பெட் என்பது தமிழ்நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு தேவையான உரங்களை வெளியிலிருந்து வாங்கி கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கும் கூட்டுறவு அமைப்பு. ஆண்டுக்கு சுமார் 4.50 லட்சம் டன் உரங்களை கொள்முதல் செய்து கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்புவது தான் இதன் பணியாகும்.

இது மிகவும் எளிதான பணியாகும். மாறாக, ஆண்டுக்கு 60 லட்சம் டன் நெல்லை கொள்முதல் செய்வதற்கு தேவையான கட்டமைப்புகளும், மனிதவளமும் டான்பெட் அமைப்பிடம் கிடையாது.

அதுமட்டுமின்றி, டான்பெட் உள்ளிட்ட கூட்டுறவு அமைப்புகளின் நிதிநிலை மோசமாக உள்ள நிலையில், அவற்றின் நிதிச்சுமை அதிகரித்தால் உழவர்கள் வழங்கிய நெல்லுக்கு பணம் வழங்க முடியாத நிலை உருவாகும். ஒரு கட்டத்தில் நெல் கொள்முதலே முடங்கும் நிலை உருவாகும். அப்படி ஒரு நிலை ஏற்பட அரசு அனுமதிக்கக் கூடாது.

தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் நெல் கொள்முதலுக்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வாங்கும் கடனையும் சேர்த்து மொத்த நேரடிக் கடன் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுக்குள் தான் இருந்து வருகிறது.

இப்போது பிற தேவைகளுக்காக தமிழக அரசு வாங்கும் கடன் அதிகரித்திருப்பது தான் மொத்த நேரடிக் கடன் அளவு மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 3 விழுக்காட்டைத் தாண்டுவதற்கு காரணம் ஆகும்.

இந்த நிலையை சமாளிக்க தமிழக அரசு, அதன் பிற தேவைகளையும், கடன்களையும் குறைக்க வேண்டுமே தவிர, உழவர்களை பாதிக்கும் வகையில் நேரடி நெல் கொள்முதலை நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து பறித்து டான்பெட் நிறுவனத்திடம் ஒப்படைக்கக் கூடாது. அது நெல் கொள்முதலுக்கு மூடுவிழா நடத்தவே வழி வகுக்கும்.

எனவே, தமிழ்நாடு அரசு அதன் கடன் தேவைகளைக் கட்டுப்படுத்தி, உழவர்களிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யும் பணி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமே தொடர்வதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

காலிஸ்தான் பிரிவினைவாதி பன்னூன் வழக்கு: அஜீத் தோவல், கோயலுக்கு அமெரிக்க நீதிமன்றம் சம்மன்!

புதுடெல்லி, நவ 22–

காலிஸ்தான் பிரிவினைவாதி குர்பத்வந்த் சிங் பன்னூன் தாக்கல் செய்த வழக்கில் இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல் மற்றும் முன்னாள் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு (ரா) தலைவர் சமந்த் கோயலுக்கு அமெரிக்க நீதிமன்றம் அழைப்பாணைகளை அனுப்பியுள்ளது.

'தில்லியில் உள்ள பாட்டியாலா ஹவுஸ் மாவட்ட நீதிமன்றம், தீஸ் ஹஸாரி மாவட்ட நீதிமன்றம் மற்றும் துவாரகா மாவட்ட நீதிமன்றம் ஆகியவற்றுக்கு இந்த அழைப்பாணைகள் 'ஃபெடெக்ஸ்' கூரியர் நிறுவனம் மூலம் அனுப்பப்பட்டுள்ளன' என்று நியூயார்க் தெற்கு மாவட்ட நீதிமன்ற எழுத்தர் சனிக்கிழமை தெரிவித்தார்.

பல்வேறு பயங்கரவாதச் சம்பவங்களில் இந்திய விசாரணை அமைப்புகளால் தேடப்படும் குற்றவாளியாக உள்ள பன்னூன், தடை செய்யப்பட்ட 'சீக்ஸ் ஃபார் ஜஸ்டிஸ்' என்ற அமைப்பின் நிறுவனராவார்.

இந்நிலையில், கடந்த 2023–இல் ரா அமைப்புடன் இணைந்து அஜீத் தோவல் தன்னை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியதாக குற்றஞ்சாட்டிய பன்னூன் அவரிடமிருந்து நஷ்ட ஈடு கோரி



நியூயார்க் தெற்கு மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை கடந்த நவம்பர் 13–ஆம் தேதி விசாரித்த நியூயார்க் தெற்கு மாவட்ட நீதிமன்றம், 'பன்னூன் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் அஜீத் தோவலுக்கான அழைப்பாணையை தில்லியில் உள்ள பாட்டியாலா ஹவுஸ் மாவட்ட நீதிமன்றம் மூலமும், சமந்த் கோயலுக்கான அழைப்பாணையை துவாரகா மற்றும் தீஸ் ஹஸாரி மாவட்ட நீதிமன்றங்கள் மூலமும் அனுப்ப வேண்டும். இந்தியாவைச் சேர்ந்த நபர்களுக்கு பிற நாட்டு நீதிமன்றங்கள் இந்திய நீதிமன்றங்களை அணுகி அழைப்பாணை அனுப்ப ஹேக் உடன்படிக்கை மற்றும் இந்திய உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் (சிபிசி) அனுமதி வழங்கியுள்ளது. இதற்கு இந்திய நீதிமன்றங்கள் ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது' என உத்தரவிட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக வாஷிங்டனில் உள்ள இந்திய தூதரகத்துக்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் மூலம் அஜீத் தோவல் மற்றும் சமந்த் கோயலுக்கு அழைப்பாணை அனுப்ப நியூயார்க் நீதிமன்றம் முயன்றது. ஆனால், இந்த மனுவை நிராகரிப்பதாக இந்தியா தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சூழலில், இவர்கள் இருவருக்கான அழைப்பாணையை தபால் மூலம் தில்லியில் உள்ள பாட்டியாலா ஹவுஸ் மாவட்ட நீதிமன்றம், தீஸ் ஹஸாரி மாவட்ட நீதிமன்றம் மற்றும் துவாரகா மாவட்ட நீதிமன்றங்களுக்கு நியூயார்க் தெற்கு மாவட்ட நீதிமன்றம் அனுப்பியுள்ளது.

'ஹேக்' உடன்படிக்கை என்பது நெதர்லாந்தில் உள்ள தி ஹேக் நகரில் கையொப்பமிடப்பட்ட சர்வதேச உடன்படிக்கையாகும். இதில் இந்தியாவும் கையொப்பமிட்டுள்ளது. இந்த ஒப்பந்தப்படி, வெளிநாட்டில் உள்ள நபர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு நீதிமன்ற அழைப்பாணைகள், சட்ட ஆவணங்களை முறையாகவும் விரைவாகவும் அனுப்ப முடியும்.

குப்பத்துக்கு அனுமதி; ஓசூருக்கு சிக்கல்!

ஆந்திரப் பிரதேசத்தின் குப்பம் பகுதியில் முன்மொழியப்பட்டுள்ள விமான நிலையத்துக்கு மத்திய அரசு முதற்கட்ட தள அனுமதி வழங்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. ஓசூரிலிருந்து சுமார் 80 கி.மீ. தொலைவில் உள்ள குப்பம் திட்டம், ஓசூர் விமான நிலையத்தின் எதிர்காலம் குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளது.

ஓசூர் விமான நிலையத்துக்கு ஏற்கெனவே இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் வான்வெளி மற்றும் பாதுகாப்பு கட்டுப்பாடுகள், பெங்களூரு விமான நிலையத்துடனான 150 கி.மீ. தொலைவு விதி, நிலம் கையகப்படுத்துதல்



உள்ளிட்ட சவால்கள் உள்ளன. குப்பம் திட்டத்துக்கு அனுமதி கிடைத்துள்ள நிலையில், ஓசூர் விமான நிலையத் திட்டத்தை விரைந்து முன்னெடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி தொழில்துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னை காசிமேட்டில் 4-வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்களுடன் அமைச்சர் மரிய வில்சன் பேச்சுவார்த்தை!

சென்னை, நவ. 22–

ஆந்திர மாநில கடலோர காவல்படையினர் கடந்த ஜூன் மாதம் 17–ந்தேதி தமிழக மீனவர்களுக்கு சொந்தமான 8 மீன்பிடி படகுகளை பறிமுதல் செய்தனர். அந்த படகுகளை விடுவிக்குமாறு ஆந்திர பிரதேச மீன்வள ஆணையர் மற்றும் ஐகோர்ட்டு உத்தரவிட்ட பிறகும், தற்போது வரை தமிழக மீனவர்களின் படகுகள் விடுவிக்கப்படவில்லை. இதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு வரும் 24–ந்தேதி விசாரணைக்கு வர உள்ளது. இந்த நிலையில், ஆந்திர மாநில கடலோர காவல்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகளை விடுவிக்கக் கோரி சென்னை காசிமேடு பகுதியில் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மீனவர்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக காசிமேட்டில் சுமார் 800 படகுகள் கடலுக்கு செல்லாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சீபுரம்



மாவட்டங்களை சேர்ந்த மீனவர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்துள்ளனர். வேலைநிறுத்தத்தால் துறைமுகம் சார்ந்த வணிக செயல்பாடுகள் முடங்கியுள்ளன. சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் மீனவர்கள் நடத்தி வரும் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் இன்று 4–வது நாளாக தொடர்வதால், காசிமேடு மீன் சந்தை வெறிச்சோடி காணப்படுகிறது. மீன்கள் வரத்து குறைந்துள்ள நிலையில் ஏற்கனவே பிடித்து வைக்கப்பட்டு இருந்த மீன்களை வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர். இந்த நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்களுடன் அமைச்சர் மரிய வில்சன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். மீனவளத்துறை துணை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெறும் இந்த பேச்சுவார்த்தையில், ஆந்திராவில் சிறை பிடிக்கப்பட்ட மீன்பிடி படகுகளின் உரிமையாளர்கள், மீனவர் சங்க பிரதிநிதிகள் மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

திருவனந்தல் பூஜை முன்கூட்டியே மாற்றம்: ஆலயம் காப்போம் கண்டனம்!

மதுரை, நவ. 23–

அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயில் முகூர்த்த நாட்கள் முன்கூட்டியே திருவனந்தல் பூஜை மாற்றம் ஆலயம் காப்போம் கண்டனம்,

இன்று 22.11.2026 அன்று மதுரை அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயில் முகூர்த்தநாள் முன்னிட்டு 2 கல்யாணம் இருந்ததால் காலை நடைபெற்ற திருவனந்தல் பூஜை வழக்கமான நேரத்திற்க்கு முன் கூட்டியே நடைபெற்றது.

இதனால் இன்று பிரதோஷத்திற்கு வழக்கமாக வரும் பக்தர்கள் மிகவும் வருத்தம் அடைந்துள்ளார்கள்

மேலும் கல்யாணத்திற்காக வீடியோ மற்றும் புகைப்படங்கள் கொடிமரத்தை தாண்டி உள்ளே சன்னிதானம் மிக அருகில் உபயோகப்படுத்த படுகிறது. இது ஆகமம் மற்றும் ஐதீகத்திற்க்கு முற்றிலும் புறம்பானது இந்த இரண்டு செய்கைக்கும் ஆலயம் காப்போம்



சார்பில் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது மதுரை அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயில் நிர்வாகம் இது போன்ற விஷயங்கள் நிகழாவண்ணம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஆலயம் காப்போம் தாழ்மையுடன் மற்றும் வணக்கத்துடன் வேண்டி கேட்டுக்கொள்கிறது

நன்றி, வணக்கம், வந்தேமாதரம்

இப்படிக்கு

தினகரன் சுந்தரம்,
ஒருங்கிணைப்பாளர்,
ஆலயம் காப்போம்,
மதுரை மாவட்டம்.

Printed by **Dr.P.Pandiarajan,** Printed at Raja Printers at No.182, Vakkil New Street, Simmakkal, Madurai –625 001. Published by **Dr.P.Pandiarajan,** No.182, Vakkil New Street, Simmakkal, Madurai –625 001. Editor. **Dr. P. Pandiarajan.** TN/WPP–143/SR/2018–2020